CC 132/2023, 10.01.2024

**ம.சா.1 செல்லம் (குறுக்கு விசாரணை)**

1ம் எதிரி என் அக்கா மகன் ஆவார். 2, 3 எதிரிகள் 1ம் எதிரியின் பிள்ளைகள் என்றால் சரிதான். நான் வருமானவரித்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். என் கணவர் வருங்கால வைப்புநிதி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார். எதிரிகள் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்து பணம் பெற்றுக்கொண்டு பணத்தை எதிரிகள் திருப்பி கொடுக்காமல் கிரையபத்திரம் எழுதிக்கொடுக்காமல் எதிரிகள் ஏமாற்றிய காரணத்தினால் நான் எதிரிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு அரூர் காவல் நிலையத்தில் 12.01.2023ம் தேதி புகார் மனு அளித்தேன். புகாரில் எதிரிகள் கடந்த 26.08.2019ம் தேதி ரூ. 25,00,000/-க்கு கிரையம் பேசி ரூ. 20,00,000/-ம் அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொன்னவகையில் மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். மேற்படி ஆவணம்தான் மசாஆ 5 என்றால் சரிதான். அதன் பிறகு 1 வாரம் கழித்து மீதித்தொகையை நான் செலுத்த தயாராக உள்ளேன் என்று எனது புகார் மனுவிலோ, நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எனக்கு கிரைய ஒப்பந்த ஆவணத்தின் சட்டத்திட்டங்கள் தெரியும் என்றால் சரிதான். ஆனால் நான் கிரைய ஒப்பந்த ஆவணத்தின்படி சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு வழக்கு சம்பவம் நடந்திருந்தால் நான் உரிய சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு சம்பவம் நடைபெறாத காரணத்தினால்தான் நான் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 21.10.2013ம் தேதி ஏற்பட்ட

கிரைய ஒப்பந்த பத்திரத்தை பற்றியும், மேற்படி ஒப்பந்தப்பத்திரம் இரத்து செய்யப்பட்ட விபரத்தையும் நான் அரூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு 06.09.2016 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை பற்றியும் மேற்படி ஒப்பந்த பத்திரம் இரத்து செய்யப்பட்ட விபரத்தையும் நான் அரூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். 06.09.2016 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கிரையத்தொகை ரூ. 21,00,000/-ம் என்றும், அட்வான்ஸ் தொகை ரூ. 10,00,000/-ம் என்றும் எனது புகார் மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 21.10.2013 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கிரையத்தொகை ரூ 20,00,000/-ம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் கிரையத்தொகை ரூ. 25,00,000/-ம் என்று குறிப்பிட்டு கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் 3 வருட காலம் வாய்தா குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 வருட காலத்தில் மீதி கிரையத்தொகை செலுத்த தயாராக உள்ளதாக சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. சட்ட அறிவிப்பை குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பாத காரணத்தினால் கிரைய ஒப்பந்த ஆவணம் செல்லுபடியாகாது என்றால் சரியல்ல. 21.10.2013 ம் தேதி ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தை 06.09.2016 ம் தேதி இரத்து செய்தோம். அவ்வாறு இரத்து செய்த பிறகு அன்றைய தினமே புதிய கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். 1ம் எதிரி என் அக்கா மகன் என்ற காரணத்தினால் நம்பிக்கையின் பேரில் எனக்கு புதிய கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 06.09.2016 ம் தேதி ஏற்படுத்திக்கொண்ட புதிய கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 3 ஆண்டுகாலம்

வாய்தா போட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு 3 வருட காலத்திற்குள் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்காத காரணத்தினால் சட்ட நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. வாய்மொழியாக கேட்டு வந்தோம். மேற்படி கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை 26.08.2019 ம் தேதி இரத்து செய்துவிட்டோம் என்றால் சரிதான். மீண்டும் அன்றைய தினமே புதிய கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி கிரையபத்திரத்தின்படி கிரையத்தொகை ரூ. 15,00,000/ம் அட்வான்ஸ் தொகை ரூ. 10,00,000/-ம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்திலும் 3 வருட காலம் வாய்தா குறிப்பிட்டு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் 25.08.2022 ம் தேதி முடிவடைகின்றது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் முடிவடைந்த பிறகு நான் எதிரிகளிடம் பணம் கேட்டபோது எதிரிகள் என்னிடம் அட்வான்ஸ் தொகை ரூ. 10,00,000/-ம் 29.08.2022 ம் தேதி திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றும், மேற்படி பணத்தை திரும்ப பெற்றுக்கொண்ட பிறகு 29.08.2022 ம் தேதி நான் கிரைய ஒப்பந்த ஆவணத்தை இரத்து செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் பணத்தை திருப்பி செலுத்தவில்லை. ஆனால் எதிரிகள் மீண்டும் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் நான் கிரைய ஒப்பந்த ஆவணத்தை இரத்து செய்தேன். அவ்வாறு இரத்து செய்த பிறகு எனக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு கிரைய ஒப்பந்தம் இரத்து செய்த பிறகு எனக்கு ரூ. 10,00,000/-ம் எதிரிகள் கொடுக்கவேண்டும் என்று சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரிகள் எனக்கு ரூ. 10,00,000/-ம் கொடுக்கவேண்டும் என்றால் நான் சட்ட அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் இரத்து செய்த பிறகு 5 மாதங்கள்

கழித்து நான் அரூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நான் அளித்த புகாரின் அடிப்படையில் அரூர் காவல் நிலையத்தில் என்னையும் எதிரிகளையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். விசாரித்த பிறகு நான் அளித்த புகாரில் உண்மை இல்லை என்ற காரணத்தினால் எதிரிகள் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் தருமபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்தேன். மேற்படி புகார் மனுவின்மீதும் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் அளித்த புகாரில் உண்மை தன்மை இல்லாத காரணத்தினால்தான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்று எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த புகார் மனுவிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**